முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்,

**முன்னிலை : திருமதி.M.அலிமா, B.A.,L.L.M.,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 07 ஆம் நாள் செவ்வாய்கிழமை

**இடைநிலை மனு எண்.02/2025**

in

**அசல் வழக்கு எண்.221/2018**

மா.சுப்பிரமணியன் ... மனுதாரர்/உத்தேச 7ம் பிரதிவாதி

**/எதிர்/**

1. மகாராஜா ...1ம் எதிர்மனுதாரர்/ வாதி

2. தமிழ்நாடு அரசு அதன் திருநெல்வேலி
மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மூலம்.
3. வட்டாட்சியர் அவர்கள், வட்டாட்சியர் அலுவலகம்,
திருவேங்கடம்.
4. ஆணையாளர் அவர்கள், குருவிகுளம்
பஞ்சாயத்து யூனியன், குருவிகுளம்.
5. பால்துரை
6. பரமசிவன்
7. C.M.துரை (இறப்பு) ...2 முதல் 7 எதிர்மனுதாரர்கள்/
1 முதல் 6 பிரதிவாதிகள்

இம்மனுவானது 18.03.2026 தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.N.பரமேஸ்வரன் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.இசக்கிமாரிமுத்து அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் திரு.S.ஜெயக்குமார் அவர்கள் ஆஜராகியும், 5, 6 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.அன்புசெல்வன் அவர்கள் ஆஜராகியும், 7ம் எதிர்மனுதாரர் காலம்சென்றுவிட்ட நிலையிலும், 2 முதல் 6 எதிர்மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவிற்கு எதிருரை இல்லை என மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ள நிலையிலும், மனு, 1ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரை மற்றும் அசல் வழக்கு கோப்பு, இருதரப்பு வாதுரைகளைக் கேட்டறிந்தும், ஆவணங்களை பரிசீலனை

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.04.07 18:40:55 +0530

செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**<u>உத்தரவு</u>**

இம்மனுவானது, மனுதாரர் தரப்பில் உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 1, விதி 10(2)–ன்படி, இந்த வழக்கில் மனுதாரரை 7ம் பிரதிவாதியாக கட்சி சேர்த்து இவ்வழக்கை மேல்நடத்திக்கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1) **<u>மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்</u>** :–

அசல் வழக்கை 1ம் எதிர்மனுதாரர்/வாதி விளம்புகை பரிகாரம் மற்றும் நிரந்தர ஏவுகட்டளை பரிகாரம் கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றும், இவ்வழக்கின் பிராது 2ம் தபசில் சொத்தில் காட்டப்பட்டுள்ள புஞ்சை புல எண்.980/34க்கு ரீ சர்வே எண்.1472/25, 1472/26 வார்டு எண்.10ல் உள்ள காலிமனை மனுதாரருக்கு கழுகுமலை சார்பதிவாளர் அலுவலக பாகவிஸ்தி ஆவண எண்.504/2005 நாள்.18.04.2005ன் மூலம் பாத்தியப்பட்ட சொத்தாகும் என்றும், மேற்படி சொத்து மனுதாரரின் தகப்பனார் சி.மு.மாடசாமி (எ) மாயச்சந்திரனுக்கு பாத்தியப்பட்டு மேற்படியாருக்கு பாத்தியப்பட்டு தனது தகப்பனார் இறப்பிற்கு பின் மனுதாரரும் மனுதாரரின் சகோதரர்களும் கூட்டாக அனுபவம் செய்து வந்த நிலையில் 2005ம் ஆண்டு ஏற்பட்ட பாகப்பிரிவினையில் மனுதாரர் பாகத்திற்கு பாத்தியப்பட்டு மனுதாரர் தனித்து அனுபவம்செய்து வரும் சொத்தை அசல் வழக்கின் 3வது தபசில் சொத்தில் காட்டி மனுதாரரின் காலிமனையை பூஸ்தி தெருவாக விளம்புகை பரிகாரம் கோரி இவ்வழக்கை வாதி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றும், 3ம் தபசில் சொத்தில் உள்ள எல்கை மாலில் மனுதாரரின் தகப்பனாரின் பெயரை குறிப்பட்டு மனுதாரரின் தகப்பனார் பெயரான சி.மு.மாடசாமி (எ) மாயச்சந்திரன் வீட்டுக்கு முன்புள்ள தெரு என குறிப்பிட்டுள்ளார் என்றும், உண்மையில் அது தங்களது குடும்பத்திற்கு தனித்துப் பாத்தியப்பட்ட காலிமனையாகும் என்றும்,

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.04.07 18:41:03 +0530

இவ்வழக்கில் 3ம் தபசில் சொத்தாக காட்டியுள்ள பூஸ்தி தெரு என்பது நில அமைப்பு இருந்து வரவில்லை என்றும், மேற்படி பூஸ்தி தெரு என்பது மனுதாரர்களது தனிப்பட்ட வீட்டுமனையாகும் என்றும், மனுதாரரால் தேவைக்காக மனுதாரர்கள் புழங்குவதற்காக வீட்டுமனை நிலத்தில் ஒதுக்கப்பட்ட நிலமாகும் என்றும், மேற்படி மனுதாரர் வீட்டு மனை நிலத்தினை இவ்வழக்கின் 2, 3, 4 தபசில் சொத்துக்களாக காட்டி 3ம் தபசில் சொத்தை பொறுத்து விளம்புகை பரிகாரம் கோரியுள்ளதால் இவ்வழக்கிற்கு மனுதாரர் அவசிய தரப்பினர் என்றும், ஆகையால், மேற்படி 3ம் தபசில் சொத்து மனுதாரருக்கு தனித்து பாத்தியப்பட்டது என்பதை இந்நீதிமன்றத்தில் நிரூபிக்க வேண்டிய வகைக்கு இவ்வழக்கில் மனுதாரர் தரப்பு சாட்சிகளையும், சான்றாவணங்களையும் இந்நீதிமன்றத்திற்கு தாக்கல் செய்ய வேண்டியது நீதியின் பொருட்டு அவசியமாகவும், நியாயமாகவும் உள்ளது என்றும், ஆகையால், இந்த வழக்கில் மனுதாரரை 7ம் பிரதிவாதியாக கட்சி சேர்த்து இவ்வழக்கை மேல்நடத்திக்கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## <u>2) 1ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்</u>

மனுதாரரின் மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல என்றும், வழக்கு தபசில் சொத்துக்கள் ஆதியில் பால்ராஜ் என்பவருக்கு பூர்வீகமாய் பாத்தியப்பட்டு மேற்படியாரின் ஆளுகையிலும், அனுபவத்திலும் இருந்து வந்த நிலையில் மேற்படி பால்ராஜ் அவர்கள் கடந்த சுமார் 25 வருடங்களுக்கு முன்பு மரணமடைந்த பின்பு வழக்கு தபசில் சொத்துக்கள் மேற்படி பால்ராஜ் அவர்களின் மனைவியும், 1ம் எதிர்மனுதாரரின் தாயாருமான லீலாவதி அவர்களுக்கு கிடைக்கப்பெற்று மேற்படியாரின் ஆளுகையிலும், அனுபவத்திலும் இருந்து வந்த நிலையில், மேற்படி லீலாவதி அவர்கள் வழக்கு

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.04.07 18:41:10 +0530

தபசில் சொத்துக்களை தனது மக்களான 1ம் எதிர்மனுதாரர் மற்றும் மாயச்சந்திரன், சிங்கப்புலிப்பாண்டியன் ஆகியோர்களுக்கு கடந்த 22.03.2004ம் தேதியன்று பதிவு நன்கொடை ஆவணம் மூலம் பாத்தியப்படுத்திக் கொடுத்து, அது முதல் 1ம் எதிர்மனுதாரர், மேற்படி மாயச்சந்திரன் மற்றும் சிங்கப்புலிப்பாண்டியன் ஆகியோர்கள் வழக்கு தபசில் சொத்துக்களை ஆண்டனுபவம் செய்து வந்த நிலையில் 1ம் எதிர்மனுதாரர் மேற்படி மாயச்சந்திரன் மற்றும் சிங்கப்புலிப்பாண்டியன் ஆகியோர்களிடம் வழக்கு தபசில் சொத்துக்களில் மேற்படியார்களின் பங்கினை பொறுத்து 1ம் எதிர்மனுதாரர் சரியான பிரதிபிரயோஜனத்தின் பேரில் கடந்த 28.01.2008ம் தேதிய பதிவு கிரைய ஆவணம் மூலம் கிரையம் பெற்று அதுமுதல் வழக்கு தபசில் சொத்துக்களை இந்த 1ம் எதிர்மனுதாரரே இந்நாள்வரை ஆண்டனுபவம் செய்து வருகிறார் என்றும், பிராது தபசில் சொத்துக்களுக்கு 1ம் எதிர்மனுதாரர் மற்றும் மேற்படியாரின் சகோதரர்கள் பெயரில் பட்டா ஏற்பட்டு, தீர்வை செலுத்தியும் 1ம் எதிர்மனுதாரர் பிராது தபசில் சொத்துக்களை இந்நாள்வரை ஆண்டனுபவம் செய்து வருகிறார் என்றும், இந்நிலையில் மனுதாரரின் சகோதரரான 6ம் பிரதிவாதி மேற்படி 18.04.2005ம் தேதிய பாகவிஸ்தி ஆவணம் தாவா வழக்கில் கண்ட சொத்துக்கள் தனக்கு பாத்தியப்பட்டது எனக்கூறி 6ம் பிரதிவாதி 5ம் பிரதிவாதியுடன் வஞ்சகக்கூட்டு சேர்ந்து கொண்டு இந்நீதிமன்றத்தில் O.S.No.56/2019 வழக்கு தாக்கல் செய்து, மேற்படி வழக்கு 16.06.2024ம் தேதியன்று தள்ளுபடி செய்யப்பட்ட பின்பு அதனை மறைத்து இந்த மனுதாரர் இந்நீதிமன்றத்தில் ஏதோ பாகப்பிரிவினை பத்திரம் மூலம் தனக்கு பாத்தியப்பட்டதாக கூறி முன்னுக்கு பின் முரணான சங்கதிகளுடன் இந்நீதிமன்றத்தில் O.S.No.116/2024 வழக்கு தாக்கல் செய்து மேற்படி வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் மேற்படி சங்கதிகளை அனைத்தும் மறைத்து (Abuse the process of Court) இம்மனுவினை தாக்கல் செய்திருப்பது சட்டப்படி சரியானது அல்ல, மேலும் மேற்படி நம்பர் வழக்கில் இந்த மனுதாரர் அவசிய

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.04.07 18:41:23 +0530

கட்சியாக இல்லாத நிலையில் 1ம் எதிர்மனுதாரரின் வழக்கினை தாமதப்படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் மேற்படி நம்பர் மனுவினை தாக்கல் செய்திருப்பது சட்டப்படி ஏற்புடையது அல்ல என்றும், எனவே மனுதாரரின் மனுவை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) <u>**தீர்வுக்குரிய பிரச்சனை:-**</u>

இம்மனுவானது அனுமதிக்கப்படத்தக்கதா? என்பதேயாகும்.

4) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு, 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரை, அசல் வழக்கு கோப்பு மற்றும் இருதரப்பு வாதஉரை ஆகியவைகள் பரிசீலனை செய்யப்பட்டன.

5) அசல் வழக்கானது 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு வா.சா.1ன் குறுக்கு விசாரணைக்காக நிலுவையில் உள்ள நிலையில், மனுதாரரால் இம்மனுவானது அசல் வழக்கில் மனுதாரரை உத்தேச 7ம் பிரதிவாதியாக கட்சி சேர்த்து இவ்வழக்கை மேல்நடத்திக்கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) அசல் வழக்கானது 1வது எதிர்மனுதாரர்/வாதியால் பிரதிவாதிகளுக்கு எதிராக பிராது 3ம் தபசில் சொத்து வாதிக்கு பாத்தியப்பட்ட பூஸ்தி தெரு என விளம்புகை செய்யும்படிக்கும், வாதிக்கு பாத்தியப்பட்ட பிராது 3வது தபசில் சொத்தினை பிராது 4வது தபசில் சொத்தோடு இணைத்து தெரு போன்ற அமைப்பினை ஏற்படுத்துவதன் மூலம் வாதி பிராது 3ம் தபசில் சொத்தினை பூஸ்தி தெருவாக புழங்கி ஆண்டனுபவம் செய்வதினை பிரதிவாதிகளோ, 1, 2, 3 பிரதிவாதிகளின் அலுவலர்களோ, 4, 5, 6 பிரதிவாதிகளின் வாரிசுகளோ, வகையாட்களோ, ஏஜெண்டுகளோ எவ்விதமான இடைஞ்சலும் இடையூறும்

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.04.07 18:41:38 +0530

செய்யாதிருக்கும் பொருட்டு ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கும்படிக்கும், பிராது 4 வது தபசில் சொத்து வாதிக்கு மட்டும் தனித்து பாத்தியப்பட்டது என விளம்புகை செய்யும்படிக்கும், வாதிக்கு பாத்தியப்பட்ட பிராது 4 வது தபசில் சொத்தின் கிழக்கு பகுதியில் உள்ள ஒடையோடு பிராது 4 வது தபசில் சொத்தினை இணைத்து எவ்விதமான நடைபாதையும், அமைப்பினையும் பிரதிவாதிகளோ 1, 2, 3 பிரதிவாதிகளின் அலுவலர்களோ, 4, 5, 6 பிரதிவாதிகளோ இடையூறு ஏற்படுத்தாமல் இருக்கும் பொருட்டு ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கும்படிக்கும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7) மேலும், 1 வது எதிர்மனுதாரர்/வாதியால் வழக்கு 2 வது மற்றும் 3 வது தபசில் சொத்து விபரத்தில் "...... 2 வது தபசில், மேற்படி பழங்கோட்டை கிராமத்தில் புஞ்சை சர்வே எண்.980/34 க்கு (ரீ சர்வே எண்.1472/25, 1472/26) வார்டு எண்.10 ல் உள்ள காலிமனைக்கு நான்கு மால்: தபசில் 1 வது அயிட்ட வீட்டுக்கும் (கிழக்கு) குருசாமி வகையறா வீட்டிற்கும் (வடக்கு) எட்டப்பன் காலிமனைக்கும் (தெற்கு) தென்வடல் ஓடைக்கும் (மேற்கு) இம்மாலுக்கு கிழமேல் 47 அடி, தென்வடல் 43 அடி, 2021 சதுர அடி மனையும் என்றும், 3 வது தபசில் சொத்து விபரத்தில் மேற்படி பழங்கோட்டை கிராமத்தில் புஞ்சை சர்வே எண்.980/34 ரீ சர்வே 1472/24 உள்ள பூஸ்தித் தெரு மால்: பிராது 4 வது தபசில் காலிமனைக்கும் (மேற்கு) மாடசாமி (எ) மாயச்சந்திரன்வீட்டு பூஸ்தித் தெருவுக்கும் (கிழக்கு) குருசாமி வகையறா வீட்டுக்கும் (வடக்கு) பிராது 1 வது தபசில் அமைந்துள்ள வீட்டிற்கும் (தெற்கு) இம்மாலுக்கு கிழமேல் 15 அடி, தென்வடல் 9.6 அடி உள்ள பூஸ்தித் தெரு பாத்தியமும் (பிராது 1 வது தபசல் சொத்தின் ஒரு பகுதியே பிராது 3 வது தபசில் சொத்தாகும்) ......" என காட்டப்பட்டுள்ளது.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.04.07 18:41:47 +0530

8) இம்மனுவில், மனுதாரர் தரப்பில் இவ்வழக்கின் பிராது 2ம் தபசில் சொத்தில் காட்டப்பட்டுள்ள புஞ்சை புல எண்.980/34க்கு ரீ சர்வே எண்.1472/25, 1472/26 வார்டு எண்.10ல் உள்ள காலிமனை மனுதாரருக்கு கழுகுமலை சார்பதிவாளர் அலுவலக பாகவிஸ்தி ஆவண எண்.504/2005 நாள்.18.04.2005ன் மூலம் பாத்தியப்பட்ட சொத்தாகும் என்றும், மேற்படி சொத்து மனுதாரரின் தகப்பனார் சி.மு.மாடசாமி (எ) மாயச்சந்திரனுக்கு பாத்தியப்பட்டு மேற்படியாருக்கு பாத்தியப்பட்டு தனது தகப்பனார் இறப்பிற்கு பின் மனுதாரரும் மனுதாரரின் சகோதரர்களும் கூட்டாக அனுபவம் செய்து வந்த நிலையில் 2005ம் ஆண்டு ஏற்பட்ட பாகப்பிரிவினையில் மனுதாரர் பாகத்திற்கு பாத்தியப்பட்டு மனுதாரர் தனித்து அனுபவம்செய்து வரும் சொத்தை அசல் வழக்கின் 3வது தபசில் சொத்தில் காட்டி மனுதாரரின் காலிமனையை பூஸ்தி தெருவாக விளம்புகை பரிகாரம் கோரி இவ்வழக்கை வாதி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றும், 3ம் தபசில் சொத்தில் உள்ள எல்கைமாலில் மனுதாரரின் தகப்பனாரின் பெயரை குறிப்பட்டு மனுதாரரின் தகப்பனார் பெயரான சி.மு.மாடசாமி (எ) மாயச்சந்திரன் வீட்டுக்கு முன்புள்ள தெரு என குறிப்பிட்டுள்ளார் என்றும், உண்மையில் அது மனுதாரரின் குடும்பத்திற்கு தனித்துப் பாத்தியப்பட்ட காலிமனையாகும் என்றும், இவ்வழக்கில் 3ம் தபசில் சொத்தாக காட்டியுள்ள பூஸ்தி தெரு என்பது நில அமைப்பு இருந்து வரவில்லை என்றும், மேற்படி பூஸ்தி தெரு என்பது மனுதாரது தனிப்பட்ட வீட்டுமனையாகும் என்றும், தங்களது தேவைக்காக தாங்கள் புழங்குவதற்காக தங்களால் தங்களது வீட்டுமனை நிலத்தில் ஒதுக்கப்பட்ட நிலமாகும் என்றும், மேற்படி மனுதாரர் வீட்டு மனை நிலத்தினை இவ்வழக்கின் 2, 3, 4 தபசில் சொத்துக்களாக காட்டி 3ம் தபசில் சொத்தை பொறுத்து விளம்புகை பரிகாரம் கோரியுள்ளதால் இவ்வழக்கிற்கு மனுதாரர் அவசிய தரப்பினர் என்று கட்சி எடுக்கப்பட்டுள்ளது.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.04.07 18:41:55 +0530

9) மேலும், மனுதாரரால் இம்மனுவுடன் 18.04.2005 தேதியிட்ட பாகவிஸ்தி ஆவணத்தின் அசல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தில் மனுதாரருக்கு ஒதுக்கப்பட்ட சொத்து குறித்த விபரத்தில் "...திருநெல்வேலி மாவட்டம் சங்கரன்கோவில் வட்டம் பாளை ரிடி கழுகுமலை சப்டி பழங்கோட்டை கிராமத்தில் பழைய நத்தம் சர்வே 980/14 வடக்கு அழகுநாச்சியாபுரத்தில் வார்டு எண்.10 ல் புதுமனை பட்டா சர்வே எண்.1472/25 ல் கீழ்பக்கம் உள்ள காலிமனைக்கு நான்குமால் எட்டப்பன் இடத்துக்கும் (தெ) 2 தபசில் மனைக்கும் (மே) கிழமேல் தெருவுக்கும் (வ) பால்ராஜ் மனைக்கும் (கி) இம்மாலுக்குள் கிழமேல் அடி 8 தென்வடல் அடி 31.50 க்கு சதுர அடி 252 ம் உள்ள மனை நிலமும் (2) மேற்படி சர்வே (980/14 ல்) வடக்கு அழகுநாச்சியாபுரத்தில் வார்டு எண்.10 ல் புதுமனை பட்டா சர்வே எண்.1472/26 ல் உள்ள காலிமனைக்கு நான்குமால் எட்டப்பன் இடத்துக்கும் (தெ) ஓடைக்கும் (மே) தெருவுக்கும் (வ) தபசில் மனைக்கும் (கி) இம்மாலுக்குள் கிழமேல் அடி 16.50 தென்வடல் அடி 31.50 க்கு ச.அடி 519.75 ம் உள்ள மனைநிலமும்......." என காட்டப்பட்டுள்ளது.

10) இம்மனுவின் மனுதாரர் தரப்பில் வழக்கு தபசில் சர்வே எண்.1472/25 மற்றும் சர்வே எண்.1472/26 ல் மேற்படி பாகவிஸ்தி ஆவணம் மூலமாக உரிமை கோரியும், 3 வது தபசில் சொத்து விபரத்தில் காட்டப்பட்ட எல்கை தவறு என்றும், மேலும், 3 வது தபசில் சொத்தாக காட்டப்பட்டுள்ள பூஸ்தி தெரு என்பது நில அமைப்பில் இல்லை, மேற்படி சொத்து மனுதாரரின் தனிப்பட்ட சொத்து என கட்சி எடுக்கப்பட்டிருப்பதை இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது.

11) மனுதாரர் தரப்பு மனுவை மறுத்து, 1 வது எதிர்மனுதாரர்/வாதி தரப்பு எதிருரையில், 1 ம் எதிர்மனுதாரர் சரியான பிரதிபிரயோஜனத்தின் பேரில் கடந்த 28.01.2008 ம் தேதிய பதிவு கிரைய ஆவணம் மூலம் கிரையம் பெற்று அதுமுதல் வழக்கு தபசில் சொத்துக்களை இந்த 1 ம் எதிர்மனுதாரரே இந்நாள்வரை

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.04.07 18:42:04 +0530

ஆண்டனுபவம் செய்து வருகிறார் என்றும், மனுதாரரின் சகோதரரான 6ம் பிரதிவாதி மேற்படி 18.04.2005ம் தேதிய பாகவிஸ்தி ஆவணம் தாவா வழக்கில் கண்ட சொத்துக்கள் தனக்கு பாத்தியப்பட்டது எனக்கூறி 6ம் பிரதிவாதி 5ம் பிரதிவாதியுடன் வஞ்சகக்கூட்டு சேர்ந்து கொண்டு இந்நீதிமன்றத்தில் O.S.No.56/2019 வழக்கு தாக்கல் செய்து, மேற்படி வழக்கு 16.06.2024ம் தேதியன்று தள்ளுபடி செய்யப்பட்ட பின்பு அதனை மறைத்து இந்த மனுதாரர் இந்நீதிமன்றத்தில் ஏதோ பாகப்பிரிவினை பத்திரம் மூலம் தனக்கு பாத்தியப்பட்டதாக கூறி முன்னுக்கு பின் முரணான சங்கதிகளுடன் இந்நீதிமன்றத்தில் O.S.No.116/2024 வழக்கு தாக்கல் செய்து மேற்படி வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் மேற்படி சங்கதிகளை அனைத்தும் மறைத்து (Abuse the process of Court) இம்மனுவினை தாக்கல் செய்திருப்பது சட்டப்படி சரியானது அல்ல என்று கட்சி எடுக்கப்பட்டுள்ளது.

12) மனுதாரர் மற்றும் 1வது எதிர்மனுதாரர்/வாதி தரப்பு கட்சிகளின் உண்மை தன்மை குறித்து இந்நீதிமன்றத்தால் சிறந்த முடிவுக்கு வர மனுதாரர் அசல் வழக்கில் கூடுதல் 7வது பிரதிவாதியாக கட்சி சேர்க்க அனுமதிக்க வேண்டியது அவசியமானது ஆகும்.

13) மேலும், அசல் வழக்கின் முழுமையான நீதிமுறை தீர்மானிப்புக்கும், இவ்வழக்கு தரப்பினர்களுக்கிடையேயான பிரச்சனையை முற்றிலுமாக தீர்க்கவும், மேலும் தரப்பினர்களுக்கிடையே பல்வேறு வழக்குகள் இது தொடர்பாக எழாமல் தடுக்கவும், இம்மனுவின் மனுதாரரை அசல் வழக்கில் கூடுதல் 7வது பிரதிவாதியாக கட்சி சேர்க்க அனுமதிக்க வேண்டியது அவசியமானது ஆகும்.

14) மேலும், மனுதாரரை அசல் வழக்கில் கூடுதல் 7வது பிரதிவாதியாக கட்சி சேர்ப்பதால் அசல் வழக்கின் தன்மையில் எவ்வித மாற்றமும் ஏற்படபோவதில்லை. மேலும், இம்மனுவின் மனுதாரரை அசல் வழக்கில் கூடுதல்

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.04.07 18:42:11 +0530

7 வது பிரதிவாதியாக கட்சி சேர்ப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித கஷ்ட, நஷ்டங்களும் ஏற்படப்போவதில்லை.

15) எனவே, மேற்கண்ட பரிசீலனையில் இருந்து, மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட இம்மனுவானது நீதியின் நலன் கருதி அனுமதிக்கப்பட்டு, இம்மனுவிற்கு இந்நீதிமன்றத்தில் தீர்வு காணப்படுகிறது.

16) **இறுதியாக:-**

இம்மனுவானது அனுமதிக்கப்படுகிறது. தரப்பினர்கள் தங்களது செலவுத்தொகையை தாங்களே ஏற்றுக்கொள்ளவேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 07 ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2026.04.07 18:42:20 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

1. **மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :-** இல்லை

2. **எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :-** இல்லை

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2026.04.07 18:42:28 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

மு.மா.உ. நீதிமன்றம்,
சங்கரன்கோவில்,
I.A.No.02/2025
in
O.S.No.221/2018
உத்தரவு (Draft / Fair)
நாள் : 07.04.2026